நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.1, மயிலாடுதுறை
முன்னிலை : திரு. K. கமலநாதன், B.Sc., B.L.,
நீதித்துறை நடுவர் எண்.1,
மயிலாடுதுறை. (FAC)

2057 திருவள்ளுவராண்டு பராபவ வருடம் வைகாசி திங்கள் 20 ஆம் நாள்
2026 ஆம் ஆண்டு ஜுன் மாதம் 03 ஆம் நாள் புதன்கிழமை

C.N.R.No.TNMY0-2001105-2026

Crl.M.P.No.456/2026
in
D.V.C.No. 19/2025

1) கௌரி, 27/2025
க/பெ. சண்முகவேல்,
த/பெ. பன்னீர்செல்வம்,
வடக்கு தெரு,
கீழ நாஞ்சில் நாடு,
மயிலாடுதுறை.

2) மைனர் மித்ரன்
(மைனர் மனுதாரருக்காக அவரது
தாயாரும் பாதுகாவலருமான
1ம் மனுதாரர் மூலம்) ...... மனுதாரர் / மனுதாரர்கள்

**// எதிர் //**

1) சண்முகவேல்

2) விசாலாட்சி

3) கவியரசன் ..... எதிர்மனுதாரர்கள் / 1ம் எதிர்மனுதாரர்

இந்த மனு இந்நீதிமன்றம் முன்பாக 13.05.2026ம் தேதியன்று இறுதியாக விசாரணைக்கு வந்தபோது மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு. P. இராஜாஜி அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு. V. முத்துராமன் அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதத்தை பரிசீலித்தும் ஆவணங்களைப் பரீசிலித்தும், இதுநாள்வரை இந்தவழக்கு இந்நீதிமன்ற விசாரணையில் இருந்து வந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்.....

KRISHNAN KAMALANATHAN
Digitally signed by KRISHNAN KAMALANATHAN
Date: 2026.06.03 18:05:08 +0530

**// உத்தரவு//**

இம்மனுவானது எதிர்மனுதாரர் 1ம் மனுதாரருக்கு இடைக்கால ஜீவனாம்சமாக மாதம் ஒன்றிற்கு ரூ.150,000/—மும், 2ம் மைனர் மனுதாரருக்கு மாதம் ஒன்றிக்கு ரூ.10,000/—மும், வழக்கு செலவுக்காக ரூ.20,000/—மும் கொடுக்க கோரி பிரிவு 23(2)ன் கீழ் குடும்ப வன்முறையிலிருந்து பெண்களை பாதுகாக்கும் சட்டத்தின் கீழ் இம்மனுவானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. **<u>மனுதாரர் தாக்கல் செய்துள்ள மனுவின் சுருக்கம்:—</u>**

2.1 1ம் மனுதாரருக்கும் 1ம் எதிர்மனுதாரருக்கும் கடந்த 11.07.2022ம் தேதியன்று திருமணம் நடைபெற்று மித்ரன் என்ற ஆண் குழந்தை உள்ளது. 1ம் எதிர்மனுதாரர் பல்வேறு பெண்களுடன் தொடர்பு வைத்து கொண்டு அடிக்கடி வெளியில் சென்று ஊர் சுற்றுவதும் வரதட்சணை கேட்டு கொடுமை செய்வதும், குடித்துவிட்டு வந்து அடிப்பதும், உதைப்பதுமாக பல்வேறு சித்ரவதை செய்து வந்துள்ளார். மேலும் 1ம் மனுதாரரையும், 2ம் மைனர் குழந்தையையும் கைவிட்டுவிட்டு பிரிந்து சென்று தனித்து வாழ்ந்து வருவதால் 1ம் மனுதாரருக்கு தனிப்பட்ட எந்தவித வருமானமும் இல்லாததாலும் 1ம் மனுதாரரும், 2ம் மைனர் குழந்தையும் உணவு, உடை, மருத்துவ செலவுகள் போன்ற அத்தியாவசிய தேவைகளை கூட பூர்த்தி செய்து கொள்ள முடியாமல் 1ம் மனுதாரரின் தாயார் தரும் சொற்ப தொகையை கொண்டு கஷ்ட ஜீவனம் செய்து வருகிறார்.

2.2 1ம் எதிர்மனுதாரர் மயிலாடுதுறையில் பிரீத்திகா மொபைல் ஸ்டோர் என்ற பெயரில் மொபைல் ஷோரூம் நடத்தி வருவதன் மூலம் மாதம் ஒன்றுக்கு ரூ.1,00,000/க்கு மேல் வருமானம் ஈட்டி வருகிறார். மேலும், 1ம் எதிர்மனுதாரருக்கு அவரது சொந்த ஊராக வை.பட்டவர்த்தியில் சொந்தமாக ஒரு மாடி வீடும், ஒரு கூறை வீடும் உள்ளது. மேலும் விலைமதிப்புமிக்க நஞ்சை, புஞ்சை நிலங்களும் உள்ளது. மேலும் 1ம் எதிர்மனுதாரர் லேவாதேவி தொழில் செய்து வருகிறார். மேலும் விலை உயர்ந்த இரண்டு இருசக்கர வாகனங்கள் சொந்தமாக உள்ளது. மேற்படி அசையும் மற்றும் அசையா சொத்துக்களின் மூலம் வரும் வருமானத்தை கொண்டு 1ம் எதிர்மனுதாரர் வாழ்ந்து வருகிறார். ஆனால் 1ம் மனுதாரர், 1ம் மைனர் குழந்தையுடன் வருமானமின்றி கஷ்ட ஜீவனம் செய்து வருகிறார். எனவே, இவ்வழக்கு முடியும் வரை இடைக்கால ஜீவனாம்சமாக 1ம் எதிர்மனுதாரர் 1ம் மனுதாரருக்கு மாதம் ஒன்றிற்க்கு ரூ.15,000/—மும், 2ம் மைனர் குழந்தைக்கு மாதம் ஒன்றிற்க்கு ரூ.10,000/—மும், வழக்கு செலவுக்காக ரூ.20,000/—மும் கொடுக்க உத்தரவிடக்கோரி இம்மனுவானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

KRISHNAN KAMALANATHAN
Digitally signed by KRISHNAN KAMALANATHAN
Date: 2026.06.03 18:05:36 +0530

**3 . எதிர்மனுதாரர்கள் தரப்பில் தாக்கல் செய்த எதிருரை:**

3.1 மனுதாரர் தாக்கல் செய்துள்ள மனு சட்டப்படியும், நியாயப்படியும் நிலைநிற்க்கத்தக்கது அல்ல. மனுதாரர் தாக்கல் செய்துள்ள இடைகால மனுவின் விபரங்களில் ஒரு சில சங்கதிகளை தவிர ஏனைய மற்ற விபரங்களை 1ம் எதிர்மனுதாரர் மறுக்கிறார். திருமண வரவேற்பின் போது எவ்வித பவுன் நகைகளோ, வரதட்சணையோ, சீர் பொருட்களோ செய்யவில்லை. 1ம் எதிர்மனுதாரரின் பெற்றோர் விருப்பம் இல்லாமல் திருமணம் நடைபெற்றதால் 1ம் எதிர்மனுதாரர் வீட்டிற்கு செல்லாமல் 1ம் எதிர்மனுதாரர் மயிலாடுதுறை L.B நகரில் வாடகை வீடு எடுத்து மனுதாரரும் 1ம் எதிர்மனுதாரரும் குடும்பம் நடத்தி வந்தார்கள்.

3.2 1ம் மனுதாரர் எப்போதும் அலைபேசியில் பேசுவதை வழக்கமாக கொண்டு இருந்தார். இதைபற்றி 1ம் எதிர்மனுதாரர் கேட்டால் நான் அப்படி தான் பேசுவேன். நீ நிறைய சம்பாதித்து பணம் கொண்டு வந்து தரமாட்டுராய் அதனால் தான் எவனிடம் வேண்டுமானாலும் பேசுவேன் அதை கேட்ட அருகதை கிடையாது என்று 1ம் மனுதாரர் எதிர்மனுதாரரை திட்டுவார். 1ம் எதிர்மனுதாரர் குழந்தையின் நலன் கருதி குடும்பம் நடத்தி வந்தார். 1ம் மனுதாரர் எதிர்மனுதாரரிடமிருந்து பணம் பறிக்க வேண்டும் என்ற கெட்ட எண்ணத்திலேயே குடும்ப வன்முறை சட்டத்தின் கீழ் வழக்கு தாக்கல் செய்துள்ளார். 1ம் மனுதாரர் வழக்கிற்காக பொய்யாக சங்கதிகளை கூறி வழக்கு தாக்கல் செய்துள்ளார். 1ம் மனுதாரரும், எதிர்மனுதாரரும் வாடகை வீட்டில் வசித்து வந்தார்கள்.

3.3 1ம் எதிர்மனுதாரர் பிரித்திகா மொபைல் ஸ்டோர் என்ற பெயரில் செல் கடை நடத்தி அதன் மூலம் மாதம் ஒன்றுக்கு ரூ.1,00,000/-ம் பணம் சம்பாதித்து வருவதாக கூறுவது முற்றிலும் பொய்யான சங்கதியாகும், அதன் உரிமையாளர் கொளஞ்சியப்பன் ஆவார். அதில் எதிர்மனுதாரர் மாதம் ஒன்றுக்கு ரூ.7,000/-ம் சம்பளத்தில் வேலை பார்த்து வருகிறார். எதிர்மனுதாரருக்கு மாடி வீடு, கூறை வீடு இருப்பதாக கூறுவது பொய்யாகும், உண்மையில் ஒரு வீடு மட்டுமே உள்ளது. அதுவும் அரசாங்கத்தில் கொடுக்கப்பட்ட தொகுப்பு வீடாகும் அந்த வீட்டில் தான் 2, 3 எதிர்மனுதாரர்கள் வசித்து வருகிறார்கள். 2ம் எதிர்மனுதாரருக்கு உடல்நிலை பாதிக்கப்பட்டதால் மேற்கண்ட தொகுப்பு வீட்டில் பத்திரத்தை வைத்து இந்தியன் ஓவர்சீஸ் வங்கியில் கடன் பெற்று மருத்துவ செலவினங்கள் எதிர்மனுதாரர்கள் செய்து வந்துள்ளனர். அந்த கடனை இன்று வரை கட்ட முடியாமல் 1ம் எதிர்மனுதாரர் கஷ்டப்பட்டு வருகிறார். 2, 3 எதிர்மனுதாரர்களுக்கு எவ்வித வருமானமும் கிடையாது. எதிர்மனுதாரர்களுக்கு தொகுப்பு வீட்டை தவிர வேறு சொத்து பத்துகள் ஏதும் கிடையாது.

3.4 1ம் மனுதாரர் IDFC Bank-ல் கலைக்சன் பிரிவில் வேலை பார்த்து மாதம் ஒன்றுக்கு ரூ.25,000/-க்கு மேல் சம்பாதித்து வருகிறார். 1ம் எதிர்மனுதாரர் மனுதாரரை அழைக்குபோதெல்லாம் 1ம் எதிர்மனுதாரரை அசிங்கப்படுத்தி பிரச்சனை செய்து விரட்டிவிடுவார். 1ம் மனுதாரர் பெற்றோரிடம் தெரிவித்தால் அவர்கள் எனது மகள்

KRISHNAN KAMALANATHAN Digitally signed by KRISHNAN KAMALANATHAN Date: 2026.06.03 18:06:05 +0530

அப்படி தான் செய்வால் விருப்பம் இருந்தால் இரு இல்லையேல் போய் விடு என்று கூறி ஆபாச வார்த்தைகளால் திட்டி அனுப்பியுள்ளார்கள். 1ம் எதிர்மனுதாரர் குழந்தையின் எதிர்கால நலன் கருதி 1ம் மனுதாரருடன் சேர்ந்து வாழ விரும்புகிறார். எனவே 1ம் மனுதாரர் தாக்கல் செய்துள்ள இம்மனுவினை செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்து உத்தரவிடுமாறு எதிருரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

4. இந்த மனுவில் தீர்வுக்குரிய பிரச்சினை யாதெனில், இம்மனுவானது அனுமதிக்கத்தக்கதா? இல்லையா? என்பதேயாகும்.

5. இரு தரப்பிலும் சாட்சிகள் யாரும் விசாரிக்கப்படவில்லை. சான்றாவணங்கள் எதுவும் குறியீடு செய்யவில்லை.

6. **<u>தீர்வு:</u>**

இருதரப்பு வாதம் கேட்கப்பட்டது. வழக்காவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டன. அசல் மனுவானது மனுதாரரால் குடும்ப வன்முறையிலிருந்து பெண்களை பாதுகாக்கும் சட்டம் 2005 பிரிவுகள் 18, 19, 20, 22 ஆகிய பிரிவுகளின் கீழ் தாக்கல் செய்யப்பட்டு, எதிர்மனுதாரர்கள் தரப்பில் எதிருரை தாக்கல் செய்யப்பட்டு, நிலுவையில் இருந்து வரும் நிலையில், இம்மனுவானது மனுதாரர்கள் தரப்பில் இடைக்கால ஜீவனாம்சமாக 1ம் மனுதாரருக்கு மாதம் ஒன்றிற்க்கு ரூ.15,000/-மும், 2ம் மைனர் குழந்தைக்கு மாதம் ஒன்றிற்க்கு ரூ.10,000/-மும், வழக்கு செலவுக்காக ரூ.20,000/-மும் கொடுக்க உத்தரவிடக்கோரி இம்மனுவானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

7. இம்மனுவானது அனுமதிக்கத்தக்கதா என்பதை பரிசீலனை செய்கையில், மனுதாரர் இடைக்கால ஜீவனாம்சமாக 1ம் மனுதாரருக்கு மாதம் ஒன்றிற்க்கு ரூ.15,000/-மும், 2ம் மைனர் குழந்தைக்கு மாதம் ஒன்றிற்க்கு ரூ.10,000/-மும், வழக்கு செலவுக்காக ரூ.20,000/-மும் வழங்கும் படியும் உத்தரவு பிறப்பிக்கக்கோரி இம்மனுவை தாக்கல் செய்துள்ளார்.

8. மனுதாரர் தனது மனுவில் கூறியுள்ள படி 1ம் எதிர்மனுதாரர் மயிலாடுதுறையில் பிரீத்திகா மொபைல் ஸ்டோர் என்ற பெயரில் மொபைல் ஷோரூம் நடத்தி வருவதன் மூலம் மாதம் ஒன்றுக்கு ரூ.1,00,000/-ம் சம்பாதித்து வருகிறார் என்று மனுதாரர் தரப்பில் தகுந்த சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் மூலம் நிரூபணம் செய்யவில்லை. 1ம் எதிர்மனுதாரர் தனது எதிருரையில் மொபைல் கடையின் உரிமையாளர் கொளஞ்சியப்பன் என்றும், மேற்படி கடையில் வேலை பார்த்து மாதம் ஒன்றுக்கு ரூ.7,000/-ம் சம்பாதித்து வருவதாகவும், மேலும் 1ம் மனுதாரர் IDFC Bank-ல் கலைக்சன் பிரிவில் வேலை பார்த்து மாதம் ஒன்றுக்கு ரூ.25,000/-ம் சம்பாதித்து வருகிறார் என்று 1ம் எதிர்மனுதாரர் தகுந்த சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் மூலம் நிரூபணம் செய்யவில்லை. இருப்பினும், மனுதாரரின் மனு மற்றும் சாட்சியத்தை ஒரு சேர

KRISHNAN KAMALANATHAN
Digitally signed by KRISHNAN KAMALANATHAN
Date: 2026.06.03 18:06:17 +0530

பரிசீலனை செய்கையில் 1ம் எதிர்மனுதாரர் இதுநாள் வரை 1ம் மனுதாரரையும், 2ம் மைனர் மனுதாரரையும் பராமரிக்காமல் இருந்து வருகிறார் என்பதை அறிய முடிகிறது. 1ம் மனுதாரர் மற்றும் 1ம் எதிர்மனுதாரர் இடையேயான கணவன் மனைவி என்ற உறவுநிலை ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளதாலும், 1ம் மனுதாரர், 2ம் மைனர் மனுதாரருடன் கஷ்ட ஜீவனம் செய்து வருவதாக கூறியுள்ளதாலும் உணவு, உடை, மருத்துவ வசதிகள், குழந்தை பராமரிப்பு போன்றவற்றிற்கு சிரமப்பட்டு வருவதாக தெரிவிக்கப் பட்டுள்ளதாலும், தற்போதுள்ள விலைவாசி மற்றும் பொருளாதார சூழ்நிலையை கருத்தில் கொண்டு 1ம் எதிர்மனுதாரர் 1ம் மனுதாரருக்கும், 2ம் மைனர் மனுதாரருக்கும் தலா ரூ.5,000/–மும், கூடுதல் தொகையாக 2ம் மைனர் மனுதாரரின் கல்வி செலவுக்கு மாதம் ஒன்றுக்கு ரூ.5,000/–மும் பிரதிமாதம் 5ம் தேதிக்குள் 1ம் எதிர்மனுதாரர் மனுதாரரிடம் செலுத்தவேண்டுமென்ற இடைக்கால ஜீவனாம்சம் வழங்க தீர்மானிக்கப்படுகிறது.

9. **முடிவில், இம்மனுவானது அனுமதித்து உத்தரவிடப்படுகிறது.**

1) 1ம் எதிர்மனுதாரர் 1ம் மனுதாரருக்கும், 2ம் மைனர் மனுதாரருக்கும் தலா ரூ.5,000/–மும், கூடுதல் தொகையாக 2ம் மைனர் மனுதாரரின் கல்வி செலவுக்கு மாதம் ஒன்றுக்கு ரூ.5,000/–மும் இம்மனு தாக்கல் செய்யப்பட்ட தேதியிலிருந்து இந்த உத்தரவு தேதி வரை கணக்கிட்டு செலுத்த வேண்டும் என்றும், இனிவரும் இடைக்கால ஜீவனாம்ச தொகையை பிரதிமாதம் 5ம் தேதிக்குள் 1ம் எதிர்மனுதாரர் மனுதாரரிடம் அசல் மனு முடிவடையும் வரை செலுத்த வேண்டுமென்று இடைக்கால ஜீவனாம்சம் வழங்க உத்தரவிடப்படுகிறது.

2) இருதரப்பினர்கள் அவர்களது செலவுத் தொகையை அவரவர்களே ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று உத்தரவிடப்படுகிறது.

இவ்வுத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு பின் என்னால் சரிபார்க்கப்பட்டு 2026ம் ஜுன் 03 ஆம் நாள் இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது,

KRISHNAN KAMALANATHAN

Digitally signed by KRISHNAN KAMALANATHAN
Date: 2026.06.03 18:06:39 +0530

நீதித்துறை நடுவர் எண்.1,
மயிலாடுதுறை. (FAC)

<u>மனுதாரர் தரப்பு சாட்சிகள்:</u> இல்லை

<u>மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள்:</u> இல்லை

<u>எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள்:</u> இல்லை

<u>எதிர்மனுதாரர்கள் தரப்பு சான்றாவணங்கள்:</u> இல்லை

KRISHNAN KAMALANATHAN

Digitally signed by KRISHNAN KAMALANATHAN
Date: 2026.06.03 18:07:01 +0530

நீதித்துறை நடுவர் எண்.1,
மயிலாடுதுறை. (FAC)